# உயிரினங்களினால் ஏற்படும் மருத்துவம் பற்றி இஸ்லாம்

46

**தமீம் அன்சாரி.ச**

**அறிவியல் தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை (இலக்கியம்),**

**தமிழ்ப்பல்கலைக்கழகம்,தஞ்சாவூர் - 10**

**மின்னஞ்சல் : thameemansarimay@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்:**

மனிதர்கள் ஆரோக்கியத்துடன் வாழ மருத்துவம் இன்றியமையாதது. நம்மைச் சுற்றி இருக்கக்கூடிய உயரினங்களின் மூலம் மருத்துவம் மக்களுக்குக் கிடைக்கிறது. பூனைகள், கால்நடைகள், தேனீக்கள் போன்ற உயிரினங்களின் மூலம் கிடைக்கும் மருத்துவமும், எப்படிப்பட்ட பிணிகளுக்கு நிவாரணியாக இந்த மருத்துவம் பயன்படுகிறது என்பது இஸ்லாம் கூறும் மருத்துவ செய்திகளுடன் ஆராயப்பட்டுள்ளன. மனிதனுக்குப் பல்வேறு பிணிகளை இறைவன் தந்தாலும், அதற்கான சிறந்த நிவாரணத்தையும் இறைவன் தந்து இருக்கின்றான். உயிரினங்களின் மூலம் கிடைக்கும் மருத்துவம் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

**முன்னுரை**

மனிதர்களுக்கு மருத்துவ நிவாரணியாக உயிரினங்கள் விளங்குகின்றன. எப்படிப்பட்ட பிணிகளுக்கு எந்த உயிரினத்தின் மூலம் மருத்துவம் மக்களுக்குப் பயன்படுகிறது. அதனால் விளையும் நன்மைகள் பற்றியும், உயிரினங்களின் மருத்துவம் மக்களுக்குரியது என கூறும் இஸ்லாம் பற்றியும் விளக்கமாக ஆராயப்பட்டுள்ளன.

**பூனையினால் ஏற்படும் மருத்துவம்:**

பூனையானது எப்போதும் ஒரு விதமான உறுமலைக் கொடுக்கும். அந்த உறுமலின் மூலம் ஒரு வகையான அதிர்வலைகள் உண்டாக்கும். அந்த அதிர்வலையின் அளவு அதிகபட்சமாக 20 Hz(ஹெர்ட்ஸ்) வரை இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அந்த அதிர்வலைகள் மனிதன் மீது படும்போது எண்ணற்ற மாற்றங்களை உண்டாக்குகின்றன. அவை:

1. மனிதனின் இதயத்தில் மற்றும் மூளையில் அதிக அழுத்தம் இருந்தால் சீரமைக்கப்படுகின்றன.
2. பூனை வளர்ப்பவர்களுக்குப் பெரும்பாலும் மாரடைப்பு வருவதிலிருந்து பாதுகாக்கப்படுகிறது.
3. உடலில் ஏதேனும் காயங்கள் இருந்தால் அவை பூனையின் அதிர்வலையின் மூலம் விரைந்து குணம் ஆகின்றன.
4. உடலில் சதைப்பிடிப்பு மற்றும் சதை வலுவிழந்து இருந்தால் விரைந்து குணமாகிறது.
5. பூனை வளர்ப்பதினால் “மூச்சுத் திணறல்” ஏற்படாது.
6. பூனை வளர்ப்பதினால் “குறைந்த இரத்த அழுத்தம்” உள்ளவர்களுக்கு சீராகும்.
7. பூனை வளர்ப்பதினால் ” எலும்பு வலுவடையும்” மற்றும் எலும்பு முறிவு உள்ளவர்களுக்கு அதிர்வலையின் காரணமாக எலும்புகள் இணைந்து சீராகும்.
8. உடலில் ஏதேனும் வலி இருந்தால் அதிர்வலை பட்டு விரைந்து குணமாகும். (https://youtu.be/7c34u7AMxko)

பூனை வளர்ப்பதினால் அதிக மருத்துவப் பலன் தருவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், அன்றையக் காலத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களுக்கு நன்மை தரக்கூடிய உயிரினங்களை வளர்க்கலாம் என ஆதரித்தார்கள். இதனைப் பற்றி இஸ்லாத்தில் பூனை வளர்க்க அனுமதி உண்டு.

பூனை என்பது அசுத்தமான பிராணி அல்ல. அது சுத்தமான பிராணியே!

" அபூ`_ைரரா (ரலி) அன்`_ அவர்கள் எப்போதும் நபிகளார் உடனே இருப்பவர்கள். அபூ`_ைரரா (ரலி) அவர்களிடம் இருக்கும் ஒரு பையில் எப்போதும் ஒரு குட்டி ஆண் பூனை வைத்திருப்பார்கள். அந்த பூனை அவரை விட்டு எங்கும் செல்லாது அவ்வாறு சென்றாலும் மீண்டும் அவரிடமே வந்து விடும். கண்ணும் கருத்துமாகப் பூனையின் மீது அதிக பாசம் கொண்டு வளர்த்தார்கள். அவருடனேயே எப்போதும் பூனை இருப்பதால் நபிகளார் அவரை "அபூ`_ைரரா" என்று "பூனைகளின் தந்தை" என பொருள்படும்படி அழைத்தார்கள்."

அரபியில் "ஹிர்ரா" என்றால் "ஆண்பூனை" என்று பெயர். "`_ைரரா" என்றால் "குட்டி ஆண் பூனை" என்று பொருள் (https://m.facebook.com)

அன்று முதல் இன்று வரை பெரும்பான்மையான மக்கள் பூனையை வளர்க்கிறார்கள். மேலும், அரபு நாடுகளிலும், பள்ளிவாசல்களிலும் பூனைகள், சுதந்திரமாக வலம் வருகின்றன. என இவற்றின் மூலம் மக்களுக்கு நன்மைகள் தரக்கூடிய உயிரினங்கள் வளர்க்கப்படுகிறது என இதன் மூலம் அறிய முடிகிறது.

**கால்நடை மருத்துவம்:**

ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால்நடைகளில் கிடைக்கின்ற பாலை எல்லா நாடுகளிலும் மனிதர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மனித சமுதாயத்தின் வரலாறு தெரிந்த நாள் முதல், இன்றும், என்றும் பால் மிகவும் சிறந்த உணவாகும்.

கால்நடைகள் உண்ணுகிற உணவிலுள்ள சத்துப் பொருட்களெல்லாம் ஜீரணமாகி ரத்தத்திற்குள் உறிஞ்சப்பட்டு விடுகின்றன.

உணவிலுள்ள சத்துப் பொருட்களையெல்லாம் உறிஞ்சப்பட்ட பின்பு எஞ்சியிருப்பது சக்கையான கழிவு மட்டுமே. இக்கழிவு கால்நடைகளின் எச்சத்தில் சாணியாக வெளியேற்றப்படுகிறது. உணவுப்பொருள் சக்கையாகவும், ரத்தமாகவும் மாற்றப்படுவதற்கு முன்பாக இடைநிலையில், "பால்" பிரித்தெடுக்கப்பட்டு கால்நடைகளின் அடிவயிற்றுக்கு (மடி) அனுப்பப்படுகிறது.

இது கால்நடைகளின் குட்டிகளுக்கு உணவாக தாய்ப்பாலாகக் கொடுக்கப்படுகிறது. இதனையே திருக்குரானில்,

"மேலும் கால்நடைகளில் உங்களுக்குப் படிப்பினை இருக்கிறது. அவைகளின் அடிவயிற்றிலிருந்து உங்களுக்குப் பருகுவதற்கு ஒரு பானத்தை நாமே வழங்கியுள்ளோம்.

செரிக்கப்பட்ட உணவிற்கும், ரத்தத்திற்கும் இடையிலிருந்து தூய்மையான பாலை நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்கள். அது பருகுவதற்கு மிகவும் சிறந்தது. சுவையுள்ளது. (குர்ஆன் 16:66) என்றும் கூறப்படுகிறது. மேலும்,

"அல்லா`_ம்ம பாரிக்லனா ஃபிஹி வசித்னா மின்`_" (இப்னு அப்பாஸ் (ரலி), திர்மிதி: 3455)

யா அல்லாஹ்! இதில் எங்களுக்கு அபிவிருத்தியை உண்டாக்கி இன்னும் அதிகமாகத் தருவாயாக. ஆமீன். (தீனியாத், ப.34)

என்னும் "பால் அருந்திய பின் ஓதும் துஆ" இஸ்லாமிய சட்டங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது என்பது இதன் மூலம் அறிய முடிகிறது.

இதில் அறிவியல் அறிஞர்களை வியக்க வைக்கும் விபரம் என்னவென்றால் - இந்த பிராணிகள் தங்கள் குட்டிகளுக்குக் கொடுப்பதற்கு எவ்வளவு பால் தேவைப்படுமோ அதைப்போல் 10 மடங்கு அதிகமாகப் பால் உற்பத்தியாவதுதான். சில பிராணிகள் 3 மடங்கு அதிகமாக உற்பத்தி செய்கின்றன. பசு, ஆடு ஆகியவை 20 மடங்கு வரை உற்பத்தி செய்கின்றன. கால்நடைகள் மனித சமுதாயங்களின் தேவைகளுக்கென்று படைக்கப்பட்டுள்ளன என்று கருதும்படி இருக்கிறது. இதனை இஸ்லாத்தில்,

"இறைவன் கால்நடைகளை உங்களுக்காகவே படைத்தான். அவை உங்களுக்கு உணவையும் இதமான வெப்பத்தினையும் மற்றும் வேறு பல பயன்பாடுகளையும் அளிக்கின்றன" (குர்ஆன் 16:5)

இறைவன் மிகவும் வல்லமையாளன். (எஸ். உமர் முக்தார், திருக்குர்ஆன் விஞ்ஞான அற்புதங்கள், 2018, பக். 113, 114)

என்று இஸ்லாத்தில் கால்நடையின் மருத்துவப் பயன்கள் மக்களுக்குரியது என இவற்றின் மூலம் புலனாகிறது.

மேலும்,

வந்தேண்டா பால்காரன் - அடடா
பசுமாட்ட பத்தி பாடப்போறேன்...
புல்லு குடுத்தா பாலு கொடுக்கும்
உன்னால முடியாது தம்பி - அட
பாதி புள்ள பொறக்குதப்பா
பசும்பால தாய்ப்பாலா நம்பி...
தன் ரத்தத்தில் ஒரு பாதி பாலாக பிரிப்பது
பசுவோட வேலையப்பா
அது பிரித்தாலும் பாலோடு தண்ணீரைக்
கலப்பது மனிதனின் மூளையப்பா...
பசு இருந்தாலும் பாலாகும் செத்தாலும்
தோலாகும்
நான் கண்டு சொன்னதுங்க...
அண்ணல் காந்தி குடிச்சதெல்லாம்
ஆயுள் வளர்க்கும் ஆட்டுப் பாலுங்க
அண்ணாமலை நான் குடுப்பதெல்லாம்
அன்பு வளர்க்கும் மாட்டுப்பாலுங்க
அன்னை வாரி கொடுத்தது தாய் பாலு
என்னை வாழ வைத்தது தமிழ் பாலு! (varigal.com)

என பாடல் வரிகள் நமக்குப் பாலின் இன்றியமையாமையையும், மருத்துவப் பலன்களையும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் கால்நடைகளின் மருத்துவம் பற்றிய செய்திகள் அறியமுடிகிறது.

**தேனின் மருத்துவம்**

தேன் மிகச் சிறந்த மருத்துவ நிவாரணம் ஆகும். தேனின் மருத்துவப் பயன்கள் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிடித்தமான உணவு:

"நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இனிப்பு பண்டத்தையும் தேனையும் விரும்பி வந்தார்கள்." (நூல் - ஸஹீ`_ல் புஹாரி - பாகம் 7 : அத்தியாயம் 65 : எண் 342)

**பொதுவான நோய் நிவாரணி:**

"மூன்றில் (நோய்க்கு) நிவாரணம் உண்டு. தேன் அருந்துவது, இரத்தம் வெளியேற்றும் கருவியால் (உடலில் கீறுவது, தீயால் சூடிட்டுக் கொள்வது ஆகிய இந்த மூன்றுமாகும்). ஆனால், தீயால் சூடிட்டுக் கொள்ளக் கூடாது என சமுதாயத்திற்கு நான் தடை விதித்துள்ளேன்." (நூல் - ஸஹீ`_ல் புஹாரி - பாகம் 7 : அத்தியாயம் 71 : எண் 584)

**தேனும் அல்குர்ஆனும் நோய் நிவாரணிகள்:**

"நோய் நிவாரணம் தரக்கூடிய இரண்டு விடயங்களை நீங்கள் எடுக்க வேண்டும். தேனும் அல்குர்ஆனும்" (நூல் - இப்னு மாஜா - பாகம் 1 : அத்தியாயம் 31: எண் 3452)

மேலும்,

- வயிற்றுப்போக்கு குணமாகவும்
- பேராபத்துகளில் இருந்து பாதுகாப்பு பெறவும்
- நல்ல ஜீரண சக்திக்கு
- பலஹீனமே இல்லாதிருக்க

1. உடல் எப்போதும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்.
2. ஜலதோஷம், இளைப்பு, நுரையீரலில் சேர்ந்துள்ள சளி எல்லாம் நீங்கிவிடும்.
3. குடல் மற்றும் வயிற்றுக் கோளாறுகள் நீங்கிவிடும்.
4. குளிர்ச்சியால் ஏற்படும் எல்லா வியாதிகளையும் உடல் எதிர்த்து நின்று தடுத்துவிடும்.
5. இதய பாதிப்புகள் நீங்கி இதயம் பலம் பெறும்.
6. புதிய இரத்தம் அதிகமாக உற்பத்தியாகும்.

மேலும், திருக்குர்ஆனில்,

"உங்களது இறைவன் தேனீக்கு மலைகளிலும், மரங்களிலும், மக்கள் கட்டும் கட்டிடங்களிலும் கூடுகளை அமைத்துக்கொள்ளும்படி அறிவூட்டினான்.

அன்றி, நீ ஒவ்வொரு புஷ்பத்திலிருந்தும் புசித்து உனது இறைவன் உனக்கு அறிவித்த எளிதான வழியில் உன்னுடைய கூட்டுக்குள் ஒடுங்கிச்செல் எனக் கட்டளையிட்டான். இதனால் அதன்

வயிற்றிலிருந்து பல நிறங்களையுடைய ஒரு பானம் (தேன்) வெளியாகின்றது. அதில் மனிதர்களுக்கு நிவாரண முண்டு. (அல்குர்ஆன் 16: 68,69)

என இஸ்லாத்தில் தேனின் மருத்துவப் பயன்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளன என்பது புலனாகிறது (www.mailofislam.com)

“அசலுன் - தேன்” (தீனியாத் 2013 ப.77)

என்பது அரபியில் குறிப்பிடப்படுகிறது என இதன் மூலம் அறிய முடிகிறது. மேலும் திருக்குறளில்,

**“நோய்நாடி நோய்முதல்நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்” (குறள் - 948)**

என திருவள்ளுவர் நோய்களைத் தீர்க்கும் வழிமுறைகளைக் கண்டு மருத்துவம் கொள்ள வேண்டும் என இதன் வாயிலாகவும் அறிய முடிகிறது.

**முடிவுரை**

மனிதர்கள் ஆரோக்கியத்துடன் வாழ மிகவும் இன்றியமையாதது மருத்துவம். அவை உணவுகள் மூலமாகவும் இயற்கையின் மூலமாகவும், உயிரினங்களின் மூலமாகவும் நமக்குக் கிடைக்கும் என்பதில் உறுதி. ஆனாலும் அதற்கேற்ப மக்கள் தங்களைத் தயார்ப்படுத்திக்கொண்டு வாழ்தல் சிறந்த ஆரோக்கியமான வாழ்வு இறைவன் மூலம் கிடைக்கும்.

**துணை நூற்பட்டியல்:**

1. எஸ். உமர்முக்தார், திருக்குர்ஆன் விஞ்ஞான அற்புதங்கள், இஸ்லாமிய ஆராய்ச்சி மற்றும் பண்பாட்டு மையம், சீதக்காதி அறக்கட்டளை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 2018.

2. தீனியாத், இரண்டாம் வகுப்பு, ஸஃப்பா பப்ளிஷர்ஸ், அஹம் அறக்கட்டளை, புரசைவாக்கம், சென்னை - 600084. ஜனவரி - 2013.

3. m.facebook.com

4. www.mailofislam.com

5. https://youtu.be/7ce4u7AMxko

6. varigal.com